# மாணவச் செல்வங்களின் படிப்புக்குத் துணையாக - வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

அதேபோல, தெலங்கானா மாநிலத்தில் செயல்படுத்துகின்ற நல்ல திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்த நாங்களும் தயாராக இருக்கிறோம். இதுதான் ஆரோக்கியமான ‘வளர்ச்சி’ அரசியல்!

**ராகுலின் பிரதிநிதியாக தெலுங்கானாவை வழி நடத்தும் முதல்வர் ரேவந்த் ரெட்டி!**

போராட்டங்களில் உருவான தெலங்கானா மாநிலத்தை போராட்டக் குணத்துடன் பாதுகாத்து, இந்தியாவின் இளம் தலைவர் சகோதரர் ராகுல் காந்தி அவர்களுடைய பிரதிநிதியாக அவர் வழி நடத்திக் கொண்டிருக்கிறார். அதற்காக நான் முதலில் அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

இங்கே கூடியிருக்கின்ற மாணவ, மாணவியரை பார்க்கும்போது எனக்கு எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்படுகிறது! மாணவச் செல்வங்களே! நீங்கள் படித்து முன்னேறுவதால், நீங்கள் மட்டுமல்ல, உங்கள் குடும்பமும் முன்னேறப் போகிறது; உங்களுடைய அடுத்தடுத்த தலைமுறைகளும் முன்னேறப் போகிறது! குடும்பங்கள் முன்னேறினால், மாநிலங்கள் முன்னேறும்! மாநிலங்கள் முன்னேறினால், நாடு முன்னேறும்! அதனால்தான், நாம் தொடர்ந்து கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்!

**திராவிட இயக்கத்தின் புரட்சிதான் நாம் இந்தளவு வேகமாக நடைபோடக் காரணம்!**

ஆயிரம் ஆண்டுகளாக சாதி எனும் கால் முளைத்த சதி! இந்த சமூகத்தை ஆட்கொண்டதால் நம்முடைய கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டது. வரலாறு நெடுக இந்த ஆதிக்கத்துக்கு எதிராக, கலகம் செய்த புரட்சியாளர்கள் இருந்து கொண்டே தான் இருக்கிறார்கள்! அந்த தொடர்ச்சியின் உச்சமாக திராவிட இயக்கம், தமிழ் மண்ணில் நிகழ்த்திய புரட்சிதான், இன்றைக்கு நாம் இந்தளவுக்கு வேகமாக நடைபோட காரணமாக இருக்கிறது!

அன்றைக்கு, சென்னை மாகாணப் பள்ளிகளில், மதிய உணவுத் திட்டத்தை நீதிக்கட்சி அறிமுகப்படுத்தினார்கள். தொடர்ந்து, பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைவரையும் எப்பாடுபட்டாவது பள்ளிகளுக்கு அழைத்து அவர்களை படிக்க வைக்கவேண்டும் என்ற காரணத்திற்காகதான்! அதுதான், படிப்படியாக வளர்ந்து இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் அரசு கொண்டு வந்திருக்கின்ற காலை உணவுத் திட்டமாக உருப்பெற்றிருக்கிறது!

**சட்டமன்றத்தில் நான் முதன் முதலாக வைத்த கோரிக்கை!**

தொடக்கக்கல்வி முடித்துக் கொண்டு, மேல்நிலைக் கல்விக்கு செல்லக்கூடிய மாணவர்களுக்கு போக்குவரத்து வசதி ஒரு தடையாக இருக்கக் கூடாது என்று சட்டமன்ற உறுப்பினராக நான் முதன்முதலாக அவையில் எடுத்து வைத்த கோரிக்கையை ஏற்று, இலவச பஸ் பாஸ் திட்டத்தை அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

அடுத்து, தலைவர் கலைஞர் அவர்கள் கல்லூரிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து கல்லூரிக் கல்விக்கு செல்வதற்கு முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு ஃபீஸ் இல்லை என்று சொன்னார்.

**கல்விச் சாலைகளில் இடஒதுக்கீட்டை உயர்த்திய கலைஞர்!**

அனைத்து சமூகத்தினருக்கும் கல்விச் சாலைகளில் இடம் கிடைக்க, இடஒதுக்கீட்டை உயர்த்தினார். இப்படி, ஏராளமான போராட்டங்கள் நிறைந்தது நம்முடைய கல்விப் பயணம்! இந்தப் பயணத்தை அடுத்தக் கட்டத்துக்கு கொண்டு போகத்தான், நம்முடைய திராவிட மாடல் அரசு நான்கு ஆண்டுகளாக புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், மாடல் ஸ்கூல்ஸ், ஸ்மார்ட் வகுப்பறைகள், விளையாட்டுத் துறைக்கு சிறப்பு கவனம் செலுத்தும் திட்டங்கள் என்று ஏராளமான திட்டங்களை கொண்டு வந்து கொண்டிருக்கிறோம்!

**காலை உணவுத் திட்டத்தால் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பு!**

ஒரு வேளை உணவு தருவதாலோ, மாதம் ஆயிரம் ரூபாய் தருவதாலோ, “என்ன பெரிய மாற்றம் வந்துவிடும்?” என்று சிலர் நினைக்கலாம். காலை உணவுத் திட்டம் அறிமுகம் செய்ததில் இருந்து, மாணவர்களுடைய வருகை அதிகரித்திருக்கிறது. புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்கள் செயல்பாட்டிற்கு வந்ததில் இருந்து, ப்ளஸ் 2 முடித்த மாணவர்களில் 75 விழுக்காடு மாணவர்கள் உயர்கல்வியில் சேருகிறார்கள். குறிப்பாக, பெண்கள் உயர்கல்வியில் சேருவது அதிக அளவில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

அரசுப் பள்ளியில் படித்த ஆயிரத்து 878 மாணவர்கள் கடந்த 4 ஆண்டுகளில், முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்கு படிக்கச் சென்றிருக்கிறார்கள்.

இன்றைக்கு கல்வியில், தமிழ்நாடு பெற்றிருக்கின்ற எழுச்சி, இந்தியாவில் இருக்கின்ற பல மாநிலங்களை திரும்பி பார்க்க வைத்திருக்கிறது! நம்முடைய திட்டங்களை அவர்கள் மாநிலங்களில் செயல்படுத்த Steady செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த எழுச்சியை பொறுத்துக் கொள்ள முடியாமல் தான் கல்விக்கு தடை ஏற்படுத்தலாம் என்று ஒன்றியத்தில் நினைக்கிறார்கள்! நம்முடைய வளர்ச்சியைப் பார்த்து, ஒதுக்க முடியாமல், தடை ஏற்படுத்துகின்ற சிலருக்கு பயத்தை வர வைக்க வேண்டும்!

> இன்றைக்கு கல்வியில், தமிழ்நாடு பெற்றிருக்கின்ற எழுச்சி, இந்தியாவில் இருக்கின்ற பல மாநிலங்களை திரும்பி பார்க்க வைத்திருக்கிறது! நம்முடைய திட்டங்களை அவர்கள் மாநிலங்களில் செயல்படுத்த Steady செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த எழுச்சியை பொறுத்துக் கொள்ள முடியாமல் தான் கல்விக்கு தடை ஏற்படுத்தலாம் என்று ஒன்றியத்தில் நினைக்கிறார்கள்! நம்முடைய வளர்ச்சியைப் பார்த்து, ஒதுக்க முடியாமல், தடை ஏற்படுத்துகின்ற சிலருக்கு பயத்தை வர வைக்க வேண்டும்!

**மாணவர்கள் வாய்ப்புகளை பயன்படுத்தி உயர உயர பறக்க வேண்டும்!**

நிச்சயம் நம்முடைய திட்டங்களாலும், உங்களுடைய Achievement-ஆலும் அது நடைபெறும்! என்னுடைய இலக்கு... அனைவருக்கும் கல்வி! அனைவருக்கும் உயர்தரக் கல்வி! கல்வி நிலையங்களுக்குள்ளே எந்த காரணத்தாலும், எவர் ஒருவரும் வராமல் இருக்கக் கூடாது; தடுக்கப்படக் கூடாது! மாணவர்களான உங்களுக்கு நான் சொல்லிக் கொள்வது ஒன்றே ஒன்றுதான்... நம்முடைய அரசு உருவாக்கித் தரக்கூடிய வாய்ப்புகளை எல்லாம் நீங்கள் பயன்படுத்திக் கொண்டு உயர, உயர பறக்கவேண்டும். அதைப் பார்த்து நாங்கள் மகிழ்ச்சி அடையவேண்டும். அப்படிப்பட்ட மகிழ்ச்சியைத் தான் இங்கே பேசிய பலர் கொடுத்திருக்கிறீர்கள். இனியும் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். நீங்கள் UG முடித்துவிட்டு வேலைக்குச் சென்றாலும், நல்ல வேலையில் Top Positionல் சென்று இருந்தாலும், PGயையும் படிக்க வேண்டும். ஆராய்ச்சிப் படிப்புக்கும் செல்ல வேண்டும். உலகம் மிகவும் பெரியது. உங்களுடைய வெற்றி அனைத்து திசைகளிலும் எதிரொலிக்க வேண்டும். நீங்கள் தொடர்ந்து படியுங்கள்... உங்களுடைய படிப்புக்குத் துணையாக உங்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு இந்த முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறேன்! கல்வியில் சிறந்த தமிழ்நாடு, கல்வியிலேயே உயர்ந்த தமிழ்நாடாக மாற வேண்டும்; மாறும்; நிச்சயமாக மாற்றுவோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் 121வது பிறந்த நாள்!

## சிலைக்கு - அமைச்சர் பெருமக்கள் இன்று மாலை அணிவித்து மரியாதை!

*சென்னை, செப். 27-*

*தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்களின் 121வது பிறந்த நாளை முன்னிட்டு, அமைச்சர் பெருமக்கள், இன்று (27.9.2025) காலை 9.30 மணியளவில் சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.*

*தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகில் உள்ள காயாமொழி என்கிற கிராமத்தில் 27.09.1905 அன்று பிறந்தார். செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்து வெளிநாட்டில் சட்டப்படிப்பு முடித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றார். கல்லூரியில் படிக்கின்ற நாட்களிலேயே சிறு தொழில்கள் செய்து முன்னேறுவது குறித்து பல கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார்.*

*1942ஆம் ஆண்டு முதன்முதலாக ‘மதுரை முரசு’ என்ற வாரம் இரு முறை இதழையும், பின்னர் ‘தமிழன்’ என்ற வார இதழையும் தொடங்கினார். யாருக்கும் அஞ்சாமல் உண்மைச் செய்திகளை வெளியிட வேண்டும் என்கிற கொள்கைப் பிடிப்பின் காரணமாக, இவரது பத்திரிகையை ஆங்கிலேய அரசு தடை செய்தும் கூட, இவர் தம் கொள்கையை மாற்றிக் கொள்ளா தவர்.*

*1942ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் மதுரையில் ‘தினத்தந்தி’ நாளிதழை வெளியிட்டார். தொடர்ந்து, ‘மாலை மலர்’ என்ற மாலைப் பத்திரிகையையும் ‘ராணி’ என்ற வார இதழையும் தொடங்கினார். 1947ஆம் ஆண்டில் ‘தினத்தாள்’ பத்திரிக்கையும், அடுத்த ஆண்டில் ‘தினத்தூது’ பத்திரிகையையும் தொடங்கினார். பத்திரிகைகளில் மக்கள் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் தமிழ்ச் சொற்கள், சிறிய வாக்கியங்கள், கவர்ந்திழுக்கும் தலைப்புகள், கருத்துப் படங்கள் உள்ளிட்ட உத்திகளைக் கையாண்டார்.*

*சி.பா.ஆதித்தனார் அவர்கள் தம் நாளிதழில் ஏராளமான படங்களுடன் செய்திகளை வெளியிட்டு தமிழ் இதழியல் துறையில் முத்திரை பதித்தார். 1942ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரை தமிழக சட்டப்பேரவை மேலவை உறுப்பினராகவும், 1957ஆம் ஆண்டு முதல் 1962ஆம் ஆண்டு வரை சட்டப்பேரவை உறுப்பினராகவும் பணியாற்றினார்.*

*1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில் சட்ட மன்றப் பேரவைத் தலைவராகப் பணியாற்றினார். அப்போது, சட்டப்பேரவை விதிகள் ஆங்கிலத்தில் இருப்பது பொருத்தமாக இருக்காது என்பதை அறிந்து தமிழில் மொழிபெயர்த்தார்.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் 1969ல் கூட்டுறவு மற்றும் விவசாய அமைச்சராகவும் திறம்படப் பணியாற்றினார். தமிழ் மீதும், தமிழர் மீதும் மாறாப் பற்று கொண்டு தம் வாழ்நாள் முழுவதும் செயல்பட்டதனால், அனைவராலும் “தமிழர் தந்தை” என அன்போடு அழைக்கப்படுகிறார்.*

*தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்கள் ஏடு நடத்துவோர்க்கும், எழுத்தாளர்களுக்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார். ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில், அன்னாரின் பிறந்த நாளான இன்று (செப்டம்பர் 27ஆம் நாள்) அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.*

*அதன்படி, இந்த ஆண்டில் கொண்டாடப்படும் தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்களின் 121 ஆவது பிறந்த நாள் நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.*

## திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு ஆகிய மாவட்டங்களில் அடங்கியுள்ள சட்டமன்றத் தொகுதிகள் - மாவட்டப் பொறுப்பாளர்கள் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதிகள் மாற்றியமைக்கப்பட்டு, **திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு** என இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, அம்மாவட்டங்களுக்கான பொறுப்பாளர்களும் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

| மாவட்டம் | மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகள் | மாவட்டப் பொறுப்பாளர்கள் |
|---|---|---|
| திருநெல்வேலி மேற்கு | அம்பாசமுத்திரம், ஆலங்குளம் | இரா. ஆவுடையப்பன் |
| திருநெல்வேலி கிழக்கு | நாங்குநேரி, இராதாபுரம் | ம. கிரகாம்பெல் |

**‘அண்ணா அறிவாலயம்’**
சென்னை 18
நாள்: 26.09.2025

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.




“எளிய மக்களுக்கு உலக நடப்புகளைக் கொண்டு சென்ற தமிழ் இதழியலின் முன்னோடிகளில் ஒருவர் !
தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவராகவும் அமைச்சராகவும் அளப்பரிய சேவைகள் புரிந்துள்ள சி.பா.ஆதித்தனார் அவர்கள் ஆற்றிய நற்பணிகளை நினைவுகூர்ந்து போற்றுவோம்

**- மு.க.ஸ்டாலின்**
**தமிழ்நாடு முதலமைச்சர்**”

**தமிழர் தந்தை**
# சி.பா.ஆதித்தனார்
**அவர்களின்**
**121ஆவது பிறந்த நாள்**

தமிழ்நாடு அரசின் சார்பில்

**தமிழர் தந்தை**
**சி.பா.ஆதித்தனார் அவர்களின்**
**திருவுருவச் சிலைக்கு**

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,**
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

நாள் : 27.9.2025, சனிக்கிழமை, நேரம் : காலை 9.30 மணி
இடம் : எழும்பூர், சென்னை

செ.ம.தொ.இ/1114/வரைகலை/2025

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009